பிரித்தானிய தமிழ்மொழிப் பரீட்சை சபை

**BRITISH TAMIL EXAMINATION BOARD (BTEB)**

www.bteb.org.uk

# தமிழ் – வாசிப்பு பரீட்சை
# TAMIL - READING EXAMINATION
# தரம் (GRADE) - 6

**Version B**

Additional materials:
Soft pencil (type B or HB)
Soft clean eraser

**TIME** 45 minutes

**INSTRUCTIONS TO CANDIDATES**

Do not open this booklet until you are told to do so.

Answer **all** questions.

Write your name, Centre number and candidate number in the spaces on this page.

**Write your answers on the question paper itself.**

Use pencil

At the end of the test you must hand in the question paper to your supervisor.

Dictionaries must not be used.

| Date | Centre Name | Centre Number |
| --- | --- | --- |
| / / | | |

| Candidate : Name | Candidate : Number |
| --- | --- |
| | |

**This question paper consists of 8 printed pages and 1 blank page.**

## PART I

**Questions 1-5**

**Read the following notices and decide which one is related to the following text (1-5).**

| | |
|---|---|
| **A** | கால்பந்து, பூப்பந்து போன்ற விளையாட்டுகளும் யோகா போன்ற உடற்பயிற்சி வகுப்புகளும் இங்கு உள்ளன. |
| **B** | பிள்ளைகளுக்கு மொழி, நுண்கலைகள் போதனைகளும் இளைஞர்களுக்கு பொருத்தமான விளையாட்டு வசதிகளையும் வழங்குவார்கள். |
| **C** | உங்களுக்கு தேவையான தகவல்களையும் சுற்றுலா வசதிகளையும் செய்து தருவார்கள். |
| **D** | உங்களுக்கு விரும்பிய நாட்டு உணவுகளை உண்ணலாம் |
| **E** | நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளைப் பெற்றுக்கொள்ளலாம். |

**Write correct statement letter A,B, or C in the box.**

1. Tamil school ☐
2. Sport centre ☐
3. Restaurant ☐
4. Pharmacy ☐
5. Travels agency ☐

## PART II

### Questions 6-10

**Read the following paragraphs and choose the correct answers to follows questions. Write correct letter in the box.**

**A**

சைவ உணவு வகைகளே உடலுக்கு ஆரோக்கியம் அளிக்கும் என்று சமீப கால ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக உடலுக்கு தேவையான புரோட்டீனை சைவ உணவுகள் மற்றும் காய்கறிகள் அளிக்கின்றன என்பது தெரிய வந்திருப்பதால் அமெரிக்கா போன்ற மேலை நாடுகளே கூட சைவ உணவுகளைப் பரிந்துரைக்கிறார்கள்.

**B**

தாவர வகை உணவுகளை அதிக அளவில் எடுத்துக் கொள்தல் நலம் எள்று அமெரிக்க புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம், தேசிய உணவு ஆய்வுக் கழகம் போன்ற சுகாதார அமைப்புகள் நடத்திய ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. சைவ உணவு முறையே ஒரு சில நோய்களுக்கு சிறந்த சிகிச்சையாகும் என்றும் கூறுகின்றனர்.

**C**

பாலில் இருந்து தயாரிக்கப்படும் பொருட்களைக் கூட சிலர் சாப்பிடமாட்டார்கள். இறைச்சி, மீன், கோழி போன்ற பறவைகளின் இறைச்சியையும் அறவே தவிர்ப்பார்கள்.

**D**

காய்கறிகளை அதிகம் உண்பதாலோ உடல் எடை தேவையான அளவைக் காட்டிலும் குறைவாக இருக்கும் வாய்ப்பு உண்டு. கொழுப்புச் சத்து குறைவாக எடுத்துக் கொள்வதாலும் உடல் எடை குறைந்து காணப்படலாம். அதற்கேற்ப உடல் எடையை சீரான அளவில் வைத்திருக்கத் தேவையான ஆகாரங்களை எடுத்துக் கொள்தல் அவசியமாகிறது.

**E**

அசைவத்தை முற்றிலும் தவிர்த்தோர் ஆரோக்கியமானவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. உயர் ரத்த அழுத்தம், இதயம் தொடர்பான நோய்கள், சர்க்கரை வியாதி, சில வகை கேன்சர் போன்றவை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உடல் பருமனாக இருப்பவர்களுக்கு அதிகம்.

6. Fat People have a higher chance of getting high blood pressure ☐

7. Being a vegetarian prevents the chances of getting some illnesses ☐

8. Vegan ☐

9 You can lose weight be eating less fat products ☐

10. Americans are being told to become vegetarians ☐

## PART III

### Questions 11-15

**Read the paragraph and answer the questions (11-15). Choose A, B or C and circle it.**

எனது பெயர் வரதன். நானும் என் தம்பியும் பாடசாலை நாட்களில் ஓட்ஸ் கஞ்சி, பொரித்த உருளைக்கிழங்கு, பழச்சாறு ஆகியவற்றை உண்போம். மதியம் பாடசாலைக்கு அம்மா பழப்பாகு தடவிய ரொட்டி, பட்டர் தடவிய ரொட்டி அல்லது முட்டை வைத்த ரொட்டி தருவார். எனது அம்மா விடுமுறை நாட்களில் காலையில் இட்டலி, மதியம் சோறும், கறியும் சமைப்பார். வெள்ளிக்கிழமைகளில் இனிப்பான பாயசம் அருந்துவோம். இரவு உணவில் அவித்த மரக்கறித் துண்டுகளோடு பிட்டு, இடியப்பம், இட்டலி போன்ற உணவுகளைச் சாப்பிடுவோம். கொத்துரொட்டி, பிரியாணி எனக்கு மிகவும் பிடிக்கும். மாலையில் சிற்றுண்டி விரும்பி உண்போம். கோடைக்காலங்களில் ஐஸ்கிறீம் விரும்பி அடிக்கடி உண்பேன். ஆனால் தம்பி பழச்சாறு தான் விரும்பி உண்பான்.

11. What does the mother cook in the mornings during the holidays?



**A**



**B**



**C**

12. What is Varathan’s brother’s favourite food?



**A**



**B**



**C**

13. What food does Varathan take to school?



**A**




**B**




**C**

14. What does Varathan eat for dinner?



**A**



**B**



**C**

15. What is Varathan's favourite food?



**A**



**B**



**C**

## PART IV

**Questions 16-20**

**Read the paragraph and answer the questions (16-20). Choose A, B or C.**

சுவாமி விவேகானந்தர் இலண்டன் மாநகருக்குச் சென்றிருந்தார். அங்கு அவரது நண்பர் ஒருவரின் பண்ணை வீட்டில் தங்கியிருந்தார். அந்தப் பண்ணை வீடு மிகப் பெரிய நிலப்பரப்பில், இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் இருந்தது. அங்கே நிறைய மாடுகள் வளர்க்கப்பட்டன. ஒருநாள் மாலை, பண்ணை மைதானத்தில் விவேகானந்தரும் அவருடைய நண்பரும், நண்பரின் மனைவியும் நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது சற்றும் எதிர்பாராதவிதமாக ஒரு மாடு அவர்களை நோக்கிச் சீறிப் பாய்ந்து வந்தது. அதன் மூர்க்கத்தனமான ஓட்டத்தைப் பார்த்து பயந்து போன நண்பரின் மனைவியும், அப்படியே மயங்கி விழுந்து விட்டார். இன்னும் சில நொடிகள் இங்கே இருந்தால் மாட்டின் கொம்புகளுக்கு இரையாக நேரிடும் என்பதை உணர்ந்த நண்பர், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேறு திசையில் ஓடினார். ஆனால், விவேகானந்தர் அப்படி இப்படி அசையாமல் ஆணி அடித்தது போல் அந்த இடத்திலேயே நின்றுவிட்டார். பாய்ந்து வந்த மாடு, கீழே விழுந்து கிடந்த நண்பரின் மனைவியையும் விவேகானந்தரையும் விட்டு விட்டு ஓடிக் கொண்டிருந்த நண்பரைத் துரத்தியது. அதிர்ஷ்டவசமாக ஒரு கட்டத்திற்குள் புகுந்து தப்பினார் நண்பர். அதன் பிறகே பண்ணை ஊழியர்கள் ஓடிவந்து மாட்டைப் பிடித்துக் கட்டிப் போட்டனர்.

“சிறிது கூட பயமே இல்லாமல் அந்த ஆபத்தான நேரத்திலும் ஒரே இடத்தில் உறுதியாக உங்களால் எப்படி நிற்க முடிந்தது?” என்று கேட்டார் நண்பர். அதைக் கேட்டு மெல்லப் புன்னகைத்த விவேகானந்தர், “நான் வித்தியாசமாக எதையும் செய்துவிடவில்லை. வருவது வரட்டும். சமாளிப்போம் என்ற ஒருவித மன உறுதியுடன் நின்றுவிட்டேன். ஒருவனைக்கண்டால் துரத்திச் செல்வது மிருகங்களுக்கு உரிய குணம். அதனால்தான் மாடு என்னை விட்டு விட்டு ஓடிக் கொண்டிருந்த உங்களைத் துரத்தியது” என்று முடித்தார்.

16. Vivek’s friendes fainted as he saw a bull

    A. True B. False C. Not in the text

17. Vivek ran away as he saw th bull

    A. True B. False C. Not in the text

18. Animals naturally chase anyone that runs away

    A. True B. False C. Not in the text

19. The bull headed Vivek’s friends’ wife

    A. True B. False C. Not in the text

20. Vivek’s friend knows the owner of the bull

    A. True B. False C. Not in the text

## PART V

**Questions 21-25**

**Read the story and answer the questions (21-25)**

“பூங்கோதை! வகுப்பை கவனிக்காமல் அங்கே என்ன வேடிக்கை?” கணக்கு ஆசிரியர் தேவராஜன் சற்று உரத்த குரலில் கேட்டதும், திடுக்கிட்டு ஆசிரியரைப் பார்த்த பூங்கோதை, “அதெல்லாம் ஒன்றுமில்ல” என்று அன்று நடந்த நிகழ்ச்சியைப் பற்றி கூறத் தொடங்கினாள்.

நான் நான்கு நாளைக்கு முன்பு என்னுடைய நண்பி பானு வீட்டுக்குப் போயிருந்தேன். அவள் வீட்டுக்கு அருகில் ஒரு தெருவில் பெரிய வேப்பமரம் ஒன்று இருக்கு. அதை சிலர் வெட்டப் போவதாக பேசிக்கொண்டதைக் கேட்டு நான் அவர்களிடம் போய் “ஏன் இந்த மரத்தை வெட்டப்போறீங்க? மரங்கள் மழையைத் தருகின்றன, நிழலைத் தருகின்றன, நல்ல காய், கனிகளைத் தருகின்றன, காற்றிலுள்ள அசுத்தத்தைப் போக்கி, தூய்மையான காற்றைத் தருகின்றன என்று எங்கள் தமிழ்ப் பாடத்தில் படித்ததைக் கூறி மரத்தை வெட்ட வேண்டாம் என்று சொன்னேன். அதைக் கேட்ட பின்பும் அவர்கள் வெட்டச்சொல்லி பணம் கொடுத்தார்கள்” என்றாள்.

ஆசிரியர் தேவராஜன், பூங்கோதையை வியப்பாகப் பார்த்தார். “இந்தச் சின்ன வயதில், பள்ளிப் பாடத்தில் படித்ததை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்று நீ நினைக்கிறதை நினைக்க எனக்குப் பெருமையாக இருக்கிறது. உன்னை மாதிரியே மற்றவர்களும் இப்படி யோசித்தால் பல மரங்கள் காப்பாற்றப்படுமே! கண்டிப்பாக இதைப்பற்றி எங்களுடைய தலைமை ஆசிரியரிடம் பேசுகிறேன்” என்றார்.

அன்று தலைமை ஆசிரியர் பாடசாலை கூட்டத்தில்,- “நாளைக் காலை மாணவர்களை ஒன்று திரட்டி, “மரத்தை வெட்டாதே, பசுமையைப் பேணுவோம், மனிதர்களின் நண்பன் மரம், மரத்தைப் பேணினால் மழை வளம் பேணலாம்” என்பது போன்ற வாசகங்களை அட்டைகளில் எழுதி, மாணவர்களிடம் கொடுத்து, அந்தப் பகுதியில் ஊர்வலம் செல்ல ஏற்பாடு செய்வோம். இதைக் கேட்ட பூங்கோதை மிக்க மகிழ்ச்சி அடைந்தாள்.

21. What did the headmaster talk about at the meeting ☐

A. Exams B. Protesting C. Programme

22. Why was the techer surprised by the student ☐

A. She was using what she learnt in her life

B. She was well educated

C. She spent a lot of time playing

23. What was written on the banners

A. Be more green B. Cross the roads safely C. Plant more trees

24. Why didn’t Poongothai allow the trees to cut

A. The tree was pretty B. The tree gave us a lot of benefit C. The tree had a swin

25. Why wasn’t Poongothai concentrating in class?

A. She doesn’t like the subject

B. She wanted to plant more trees

C. She was worried about the tree